அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம்: 08/2005(VI)

எனது இல : ஆ/7/3/1/31
அரசாங்க நிர்வாக
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07
2006 ஏப்பிரல் மாதம் 21 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

## தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XXIV இல் பிரிவு 11 ஐ திருத்தம் செய்தல் – ஆதனக் கடன்.

வங்கிகளுக்கூடாக ஆதனக்கடன் வழங்குவது தொடர்பான ஏற்பாடுகளை தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV இல் பிரிவு 11 இற்கு பதிலீடு செய்து 2005.03.31 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள 08/2005 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையை கீழ்க்காணும் பிரிவுகளை சேர்த்துக் கொள்வதன் மூலம் மீளவும் திருத்தப்படுகிறது. பின்குறிப்பிடப்படும் திருத்தங்கள் 2006.01.01 ஆந் திகதி முதல் வலுவிலிருக்கும் வண்ணம் நடைமுறைப்படுத்தப்படும்.

### 11.2 தகவுத்திறன்

11.2.6 05 வருடங்களுக்கு குறையாத தொடர்ச்சியான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள ஓய்வூதிய/பங்களிப்பு ஓய்வூதிய உரித்துடைய முப்படையின் தொண்டர் படைக்கு உரிய அலுவலரொருவர் /ஏனைய அலுவலர் ஒருவராகுதல்.

11.2.7. 05 வருடங்களுக்கு குறையாத தொடர்ச்சியான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள 55 வயது வரை சேவையாற்றுவதற்கு வாய்ப்புள்ள அலுவலரென திணைக்களத்தினால் சான்றுப்படுத்தப்படும் இடர் நிலை காப்புச் சேமப்படையின் அலுவலர் ஒருவர்.(received Police)

02. இச் சுற்றறிக்கை பொதுச் திறைச்சேறியின் இணக்கத்துடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம் /. டி. திசானாயக்க
செயலாளர்
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு.